| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 03/07/2024 | முதல் | 07/07/2024 |
| | அறிக்கை எண் : | 053/ 2024 | வெளியீட்டு நாள் : | 02/07/2024 | | |

**புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (27.06.2024முதல் 01.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 3.8 | 3.8 | மழை (மி.மீ) | 1 | 2 | 3 | 1 | 2 |
| 34 | 31 | 37 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 36 | 36 | 36 |
| 27 | 26 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 26 | 25 |
| 7 | 6 | 5 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 6 | 5 | 8 |
| 73 | 72 | 73 | 77 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 70 | 60 | 60 | 60 |
| 67 | 56 | 47 | 73 | 56 | | 30 | 30 | 40 | 40 | 40 |
| 17 | 7 | 15 | 18 | 20 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 8 | 10 |
| மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் கிழக்கு | வட மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென்மேற்கு |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3, 4, 5, 6 மற்றும் 7 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(05-11 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 36° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

05-07-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, நெல், கால்நடை.**

**வாழை:**

வாழைப் பயிரில் பனாமா வாடல் நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இந்நோய் தாக்கமானது முதலில், வாழையின் அடிப்புற இலைகளில் குறிப்பாக இலை ஓரங்களில், மஞ்சள் நிற மாற்றம் மற்றும் வாடிக் காணப்படும். பின்பு இந்த மஞ்சள் நிறம், இலையின் மையப்பகுதி வரை பரவி, ஓரங்கள் காய்ந்து போகும்.

அறுவடைக்கு பின், பாதிக்கப்பட்ட செடியின் பாகங்களை சேகரித்து அழிக்க வேண்டும். சரியான உரம், நீர்ப்பாசனம் மற்றும் களைகளை கட்டுப்படுத்தி வளர்க்க வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 2.5கிலோ சூடோமோனாஸ் புளோரசன்ஸ் உடன் தொழு உரம் மற்றும் 250 கிலோ வேப்பம் புண்ணாக்கை கலந்து மண்ணில் இட வேண்டும்.

**நெல்:**

உயிர் உரங்கள் தாவரங்களுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதை அதிகரிக்கின்றன, வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன மற்றும் மண்ணின் ஆரோக்கியத்திற்கு பங்களிக்கின்றன.

குறிப்பாக, அசோஸ்பைரில்லம் நைட்ரஜனை (80 கிலோ தழைச்சத்து/எக்டர்/பருவம் வரை) நிலைநிறுத்தவும், நெல்லில் பச்சையம் மற்றும் தானிய புரதத்தை மேம்படுத்தவும் அறியப்படுகிறது.

இந்த நடைமுறைகள் ரசாயன உரங்களை நம்பியிருப்பதை 50% வரை குறைக்கலாம்.

குறுவை பட்டம் நெல் நடவு செய்யும் விவசாயிகள் நெல் நடவுக்கு முன்பாக ஒரு ஏக்கருக்கு அசோஸ்பை ரில்லம் 1 கிலோ மற்றும் பாஸ்போபாக்டீரியா அல்லது அசோபாஸ் 1 கிலோ வீதம் 40 லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசல் தயார் செய்து நெல் நாற்றுகளின் வேர்களை கரைசலில் 15 முதல் 30 நிமிடம் வரை நனைத்து பின் நடவு செய்யவும்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.